Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -29 | 14-08-2003 | வியாழக்கிழமை | ஓசை 177

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்
கணேசா நகையகம்
194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
123,பஜார் வீதி, வவுனியா.

## இந். பத்திரிகையாளர் நாராயணசாமி எழுதிய தலைவர் பிரபாகரன் அவர்களின் சுயசரிதை

(லண்டன்)

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சுயசரிதையை டெல்லி பத்திரிகையாளர் எம். ஆர். நாராயணசாமி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.இதனை முதல் முதலாக ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டது தொடர்பாக பத்திரிகையாளர் எம். ஆர். நாராயணசாமி கூறும்போது,

பிரபாகரனை நான் ஒரு முறைதான் சந்தித்துள்ளேன். இவரைப் பற்றி எழுதுவதற்கு அவரது தந்தையார் மற்றும் சில உறவினர்களைச் சந்தித்துப் பேசியுள்ளேன்.நான் இப்புத்தகத்தை இந்தியன் என்று எழுதவில்லை. தமிழ் பேசுகின்றவன் என்று எழுதவில்லை. நான் ஒரு பத்திரிகையாளன் என்ற ஸ்தானத்தில் இருந்தே எழுதி

(08ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சூல்ஹெய்ம் இன்று மட்டக்களப்பிற்கு விஜயம்

(கொழும்பு)

நேற்று வன்னிக்கு விஜயம் செய்த நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்கின்றார்.

அங்கு செல்லும் அவர் உள்ளூர்த் தலைவர்களையும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை சீனாவில் இருந்து நாடு திரும்பியுள்ள சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் பாரிஸ் பயணம், இ. நி. திட்ட வரைவு;

# தமிழ்ச்செல்வன்-எரிக் . சந்திப்பில் முக்கிய இடம்

## குரங்குபாஞ்சான் விவகாரமும் பிரஸ்தாபிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், அரசாங்கத்தால் எமக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைவு சம்பந்தமான விடயங்களை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப்புலிகளின் பரிந்துரைகளுக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்காக பாரிஸில் விடுதலைப்புலிகளின் சட்டம் மற்றும் துறைசார் நிபுணர்களின் சந்திப்புத் தொடர்பான பயண ஒழுங்கமைப்புக் குறித்தும் இன்று நாங்கள் ஆராய்ந்துள்ளோம் என நேற்று நடைபெற்ற, நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் தலைமையிலான குழுவினருடனான சந்திப்புக் குறித்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த பவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.நோர்வே பிரதிநிதிகள் தரப்பில் நோர்வே சமாதான தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தூதரக இரண்டாவது அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கிளிநொச்சியில் உள்ள சமாதானச் செயலகத்தில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை இரண்டரை மணிநேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(08ஆம் பக்கம் பார்க்க)



எரிக்சூல் ஹெய்ம் உள்ளிட்ட நோர்வேக் குழுவினர்.

## பிரான்ஸ் பயண ஏற்பாடு குறித்து ஆராயவே வன்னிக்கு வந்தேன்!

### எரிக் சூல் ஹெய்ம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் பிரான்ஸ் பயணம் தொடர்பான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதே எனது இன்றைய விஜயத்தின் முக்கிய நோக்கமாகும் என நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் தெரிவித்துள்ளார். மேலும் விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு குறித்தும் சிறிலங்கா அரசாங்கம் சமர்ப்பித்துள்ள திட்ட வரைவு குறித்தும் விடுதலை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் ஆராய்ந்தேன்.

மேலும் குரங்குபாஞ்சான் விவகார

(08ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்துப் பிரதமர் வருகையையடுத்து கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

தாய்லாந்துப் பிரதமர் இன்று சிறிலங்கா வரவுள்ளார். இதன் காரணமாக இன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை சிறிலங்காவின் பல வீதிகள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்படவுள்ளதாக சிறிலங்காவின் போக்குவரத்து பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்துப் பிரதமரை அழைத்துச் செல்லும் கட்டுநாயக்க நீர்கொழும்பு வீதி, பேலியகொட வீதி உட்பட பல வீதிகள் மூடப்படவுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.நாளை பாராளுமன்றத்தில் தாய்லாந்துப் பிரதமர் விசேட உரை ஒன்றை ஆற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பார ஊர்தி-உந்துருளி மோதல் ஓட்டுநர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(அலுவலக செய்தியாளர்)

பாரவூர்தியுடன் உந்துருளி மோதியதில் உந்துருளி ஓட்டுநர் காயங்களுக்குள்ளான நிலையில் மயிரிழையில் உயிர் தப்பினார்.மேற்படி சம்பவம் நேற்று பகல் 10.00 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக் கருகாமையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து காயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்டுவரும் உந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் கைவிட்ட குண்டு வெடித்து சிறுவன் பலி; ஐந்து சிறுவர்கள் ஆபத்தில்

### காரைநகர் - ஊரிக்காட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தால் காரைநகர் - ஊரிக்காட்டில் தவறவிடப்பட்ட குண்டு ஒன்றை சிறுவன் ஒருவன் விளையாட்டாகக் கழற்றி விளையாட முற்பட்டவேளை அது வெடித்து உடல் சிதறிப் பரிதாபகரமாக பலியானதுடன் ஏனைய ஐந்து சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்றுக் காலை பதினொரு மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சு. வல்லைவராஜ் (வயது-14) என்ற சிறுவனே உடல் சிதறிப் பலியாகியுள்ளார். இவருடன் கூட விளையாடிக் கொண்டிருந்த ப.மதுசா (வயது-06), ப.ரவி (வயது-13), ப. மதுசனா (வயது-03), க. கயேந்திரன் (வயது-12), ப. ஜெயமாலா (வயது-13) ஆகிய ஐந்து சிறுவர்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிவிசேட சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் இரு சிறுவர்களது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள்.காணி ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்த ஆறு சிறுவர்களும் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட மேற்படி குண்டை விளையாட்டுப் பொருள் என்று எண்ணி அதனைக் கழற்ற முற்பட்டவேளை அந்தக் குண்டு வெடித்ததில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (33,27)

## புலிகளுக்கு கடற்பிரதேசம் ஒதுக்குவது பற்றி அரசு எந்தத்தீர்மானத்தையும் எடுக்கவில்லை

### — படைத்துறைஅமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்னாண்டோ

(கொழும்பு)

போர்ப் பயிற்சிகளை மேற்கொள்ளும் பொருட்டு விடுதலைப்புலிகளுக்கு கடற்பிரதேசம் ஒன்றை ஒதுக்கிக் கொடுப்பது தொடர்பாக அரசாங்கம் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என்று படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்னாண்டோ தெரிவித்துள்ளார். மேற்படி விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு யோசனைகளை முன்வைத்துள்ள போதிலும் இது குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

**அறிவுடைமை கல்வி நிலையம்,கிளிநொச்சி**

2004 A/L வினாவிடை வகுப்புக்கள் தமிழ் - S.கணேசலிங்கம் பி.ப 3மணி, இந்து நாகரிகம்- S. கனெக்ஸ் பி.ப 4 மணி ஆரம்பம் 16.08.2003 சனி. நிர்வாகி. (3629)

**தவறிவிட்டது**

துரையப்பா இரத்தினசபாபதி என்பவரது தேசிய அடையாள அட்டை 10.08.03 அன்று புளியங்குளத்திற்கும் வட்டக்கச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (3638)

**தவறிவிட்டது**

கடந்த 12.08.2003 கேப்பாப்புலவிற்கும் புதுக்குடியிருப்பிற்கும் இடையில் எனது 05 பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆனந்தன் தேனீர்க்கடை, தண்ணீரூற்று, முள்ளியவளை அல்லது புது. ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்: சி.பரமநாதன். (3479)

**நன்றி கூறல்**

க.பொ.த(உ/த) 2003 கலைப்பிரிவில் நற்பேறுகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்ட நிலையை 03 இற்கு உயர்த்த வழி சமைத்த கிளி. N.E.C. ஆசிரியர்களான திரு.லவன், லோகேஸ்வரன், கிருஷ்ணா, திவாகர், சிவானந்தன், ஜெயசிங்கன், சூரி ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். சி. நிமலன் (3637)

**விற்பனைக்குண்டு**

தரமான புழுக்கொடியல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வெண்புறா நிறுவனத்திற்கு முன்பாக) கண்டிவீதி, கிளிநொச்சி. (சி-8456)

**வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?**

(15.08.2003) - ராகு கேது மாற்றமும், ஜீவன்-பிரம்மம் ஐக்கிய வேதா ந்த ரகசியமும் அடங்கியன. கணிப்பாசிரியர் - PROF.சத்தியதாஸன் (சத்யா), கிடைக்குமிடம்: ருக்மணி புத்தக சாலை, புதுக்குடியிருப்பு. (சி-7773)

# வீதிவிபத்து விபரீதங்களைத் தடுக்க தமிழீழ சு.சேவை ஆலோசனை

(அலுவலக செய்தியாளர்)

தற்போது முழு இலங்கையிலும் அதிகரித்து வரும் விபத்துக்களால் ஏற்படும் மரணங்களைத் தடுக்கும் வகையில் தமிழீழ சுகாதார சேவையினர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

தற்பொழுது முழு இலங்கையிலும் விபத்துக்களால் ஏற்படும் மரணங்களின் தொகை அதிகரித்து வருகின்றது. எனினும் சமாதானச் சூழ்நிலைக்குப் பின்னர் வடக்கு- கிழக்குப் பகுதிகளிலும் விபத்துக்களால் ஏற்படும் இறப்புக்கள் அதிகரித்து வருகின்றன. இவ்விபத்தானது மனித இறப்பிற்கான முதல் மூன்று காரணிகளில் ஒன்றாக விளங்குவதால் இவ்விடயத்திலும் வரு முன்காப்பு அறிவுரைகளை வழங்க வேண்டிய அவசியமாகும். விபத்துக்கள் பல இடங்களிலும் பல காரணங்களினால் ஏற்பட்டபோதும் முக்கியமாக தற்பொழுது அதிகரித்துவரும் இறப்புக்கள், பாதை, வீடு, உயரம், தொழிற்சாலை, விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களில் இடம்பெற்றபோதும தற்போது இவற்றில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பாதை விபத்துக்கள். இவை பாதசாரி, சாரதிகளாலும் பாதைகளில் உள்ள பிழைகளாலும், வாகனத்திலுள்ள பிழைகளாலும் ஏற்படலாம்.

01) பாதசாரிகளும் சாரதிகளும் போக்குவரத்து வீதிகளைப் பாவிக்கும் முறை - வீதி ஒழுங்குகளைப் பேணுபவர்களால் வீதி ஒழுங்கு தொடர்பான அறிவித்தல்களுக்கு முரணாக செயற்படுதல்.

02) வீதிப் போக்குவரத்தில் ஏற்படும் அவசரம் : அவசரம் ஒரு பெரிய எதிரி. வாகனம் ஓட்டுபவர்கள் திட்டமிடல் இன்றி அவசரமாக வாகனத்தை ஓட்டுதல். பாடசாலை, நகரப் பகுதி, சந்தை, பஸ் நிலையம், வாகனத் தொடரணி கூடிய இடங்களில், மக்கள் கூடிய இடங்களில் வேகமாக வாகனங்களை ஓட்டுதல் வாகனம் ஓட்டுவதற்கு முன்னர் பிரேக் போன்ற வாகனத்தடை உறுப்புகளைச் சரிபார்க்காமை போன்றவற்றால்.

03) பொறுமையின்றி மற்றவரின் உரிமையை மதிக்காமல் வாகனம் செலுத்துதல் எதிர்வரும் வாகனத்திற்கு அரைவாசிப் பாதை கொடுக்காமை, வீதிச் சமிக்ஞை காட்டாமல் (Signal) வாகனத்தை நினைத்த வகையில் ஓட்டுதல், திரும்புதல் போன்ற செயற்பாடுகள்.

04) வேகமாக ஓட்டுவது, வேகம் குறைக்க வேண்டிய இடத்தில் குறைகாமல் ஓட்டுவது, உரிய நேர காலத்தில் வாகனத்திற்கான வீதிச் சமிக்ஞை (Signal) காட்டாமல் வாகனத்தைச் செலுத்துதல்.

05) மதுபானங்களைப் பாவித்து வாகனங்களை ஓட்டுவது, மதுபானம் பாவித்தபின் வாகனம் ஓட்ட முடியும் என நம்புவது மூடத்தனம், குடித்தபின் ஒருவரின் கவனமோ, பொறுமையோஉடன் நடவடிக்கை எடுக்கும் நேரமே பாதிக்கப்படுகின்றது.

06) களை, நித்திரை முன்பு இல்லாமை, நோய்க் காரணங்கள், கண்பார்வை பாதிக்கப்பட்டிருந்தால் வாகனம் ஓட்டுதல்,நித்திரைத் தூக்கம் என்பனவற்றுடன் வாகனத்தை ஓட்டுதல்.

07) துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்கள் வீதி ஒழுங்கு விதிகளை மதிக்காமல் துவிச்சக்கர வண்டி செலுத்துதல், வேகமான துவிச் சக்கர வண்டி செலுத்துதல், வெளிச்சமின்றி துவிச்சக்கரவண்டி செலுத்துதல், பிறேக் இல்லாமல் செலுத்துதல், பாதை ஒழுங்குகள் அடையாளங்களை மீறுதல்.

08) பாதசாரிகள் வீதி ஒழுங்குடன் வீதிகளைப் பயன்படுத்தாமை, வீதி கடக்க வேண்டிய இடங்கள், வாகனத்திற்கு பின்னோ, முன்னோ வேகமாக வீதியைக் கடத்தல், நிறுத்திய வாகனங்களில் அவசரமாக ஏறுதல், இறங்குதல் போன்ற வற்றால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

09) துவிச்சக்கரவண்டி ஒடுபவர்களுக்கு இடையூறு இன்றி வாகனங்களை ஒளிக்குறைப்புச் செய்து ஓட்டுதல் வேண்டும். அத்துடன் துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்கள் இரண்டு, மூன்று பேர் இணைந்து ஓட்டுவதால வீதி விபத்துக்கள் ஏற்படவாய்ப்புள்ளன. மேற்படி ஒன்பது காரணங்களினாலும் வீதிகளில் கணிசமா னளவு விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் எமது இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது. அத்துடன் மருத்துவச் செலவு எனப் பல் வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் இறப்புக்கான காரணங்களில் இவ்விபத்துக்கள் முக்கிய காரணத்தை வகிக்கின்றன. சமூக பின்னடைவுகளைக் கொடுப்ப துடன் பெறுமதிமிக்க உயிரைக் கொல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றோம். உயிர்களுக்கு எப்பாதிப்பும் ஏற்படாமலே வீதிகளைப பாவிக்க வேண்டும் என்பதில் சிரத்தையுடன் இருக்க வேண்டும். (பா)

# போலி நாணயத்தாள் அச்சிடும் நிலையம் கண்டுபிடிப்பு

புத்தளம் கற்பிட்டிப் பகுதியில் போலி நாணயத் தாள்கள் அச்சிடும் நிலையமொன்றை நேற்று பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டனர். கற்பிட்டி நாவற்காட்டைச் சேர்ந்த வீடொன்றில் இந்த நிலையம் இயங்கி வந்துள்ளது. நாணயத் தாள்களை அச்சிடப் பயன்படுத்தப் பட்ட கணினி இயந்திரத்தையும் ஏனைய உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மூவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

# சாவு அறிவித்தல்

**அமரர் திரு.**

## சிற்றம்பலம் சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற கமநலசேவைத்திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்.) மாவட்ட புரத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் – 83, டி8 உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிவப்பிரகாசம் அவர்கள் 13.08.2003 அன்று இறைபதம் எய்திவிட்டார். அன்னார் இராசாத்தியின் அன்புக் கணவரும், காலம்சென்ற கனகசபை, காலம் சென்ற தங்கரத்தினம், மங்கையற்கரசி, மகேஸ்வரி, வன்னியசிங்கம், செல்வநாயகம்ஆகியோரின் சகோதரரும் சாந்தினி,மனோகரன், கருணாகரன் (தேவன்,கமநல சேவை நிலையம், கிளிநொச்சி), லலிதா (பிரான்ஸ்), சிறிகரன் (மிருக வைத்திய நிலையம் வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானச்சந்திரன், ஞானகௌரி சிவபாலன் (பிரான்ஸ்) சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாத், பிரதீப், ஞானகரன், கஜேந்தினி, அஜந்தா, விந்துஜா, சிவயக்சன், லாவன்யா, சிவஞானி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று 14–08–2003 இன்று பி.ப.3.00 மணிக்கு உருத்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்-கருணாகரன் (தேவன்)

(3640)

**விண்ணப்பம்கோரல்**

தேசிய கல்வி நிறுவகத்தால் கல்வி மாணிப் பட்டக்கற்கைநெறி 2004/2006 ஆசிரிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பம் பெறும் திகதி 25.08. 2003க்கு முன்னர் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் முடிவுத் திகதி 15.09.2003 ஆகும் மேலதிக விபரங்களை வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என முல்லை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாகரத்தினம் தெரிவித்துள்ளார்.(26)

**விரிவுரைகள் 16ல் ஆரம்பம்**

முல்லைத்தீவுப் பிரதேச நிலையத்தால் நடத்தப்படும் 2ம் கல்வியாண்டு விரிவுரைகள் எதிர்வரும் 16.08.2003 இல் இருந்து ஆரம்பமாகும் என்று கற்கைநெறியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ச.நாகரத்தினம் அறிவித்துள்ளார். (26)

# பாராட்டுகிறோம்

2003க்கான உயர்தரப் பரீட்சையில அதிக பெறுபேறுகளைப் பெற்று எமது கல்வி நிலையத்துக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களான

| விஞ்ஞானப்பிரிவு | | நிலை |
|---|---|---|
| இ.ஜெகன் | 2A,B | 01 |
| க.சஜீவன் | A,2B | 03 |
| S.துஷ்யன் | 2B,C | 04 |
| T.மணிகரன் | 2B,C | 05 |
| சி.கங்கையாணன் | B,2C | 06 |
| சி.வாகீசன் | B,2C | 07 |

2002ஆம் ஆண்டு நடைபெற்ற (க.பொ.த.) சாதாரண பரீட்சையின் அகில இலங்கையில் கணிதபாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற 10 மாணவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட மாணவனான பா.மஞ்சுதன் அவர்களையும் பாராட்டுகிறோம்.

நிர்வாகி,
முல்லை கல்வி நிலையம்,
தண்ணீரூற்று.

(3478)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
17
03
1972



தாயக மீட்பில்
15
08
2000

கடற்கரும்புலி

## மேஜர் திசையரசி

(செல்லச்சாமி–செல்லம்)
உடுத்துறை வடக்கு, தாளையடி.

அலையோசை ஒலித்திட ஆதவன்
கதிரொளி பரப்பும் நிலமதில் உதித்த பூங்கொடியே!
அன்பின் திருவுருவாய் பண்பின் இருப்பிடமாய்
பாசமழை பொழிந்திட்ட எமதன்புத் திசையே!
வெறி கொண்ட பகையழிக்க தானைத் தலைவன்
சேனையில் சேர்ந்திட்ட திசையே!
நிலத் திரைதனில் நீச்சலாடும்
கடற்புலியாய் நீ இணைந்துஅந்நியரின்
ஆதிக்கத்தை அழித்திட கடற்கரும்புலியானாய்.
உம்மை இழந்த இழப்பிற்கு ஆறுதல் சொல்ல
ஆயிரம் பேர் வந்தென்ன உந்தன் .
ஆருயிர் அன்பினைக் காண்பது எக்கணம்?

**15-08-2003 நாளை எமது இல்லத்தில் நடைபெறும் 3ம் ஆண்டு நினைவு நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண் பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்துகொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குடும்பத்தினர்.
உடுத்துறை வடக்கு,
தாளையடி.

(3639)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த சகல குடும்பங்களுக்குமான**

# முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைெயழுத்திட்டபின், அதாவது 2002–02–22ஆம் நாளுக்குப் பின்னர் இம்மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்து உருபா 2500 க்கு உட்பட்ட வருமானத்தினைப் பெறும், இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத தனிநபர் குடும்பங்களும் ஏனைய குடும்பங்களும் தங்கள் பகுதி கிராம அலுவலருக்கும், ஊரக புனர்வாழ்வுக் குழுவுக்கும் விண்ணப்பித்து உரிய படிவங்களை நிரப்பி, குடும்பப் பதிவு அட்டைகளைப் பெற்று, தங்கள் சீவனோபாயக் கொடுப்பனவாக உருபா 25,000 /= த்தைப் பெற்றுக் கொள்ள எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேற்படி குடும்பங்கள் தங்களைப் பதிவு செய்யும் இறுதி நாள் 2003–08–30 ஆகும். இந் நாளுக்குப் பின்னர், ஏற்கனவே மீளக்குடியேறியும் பதிவினை மேற்கொள்ளாதவர்களது பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனையும் மனவருத்தத்தோடு அறியத் தருகின்றேன். இது தொடர்பில் உடன் கிராம அலுவலரையும் ஊரக புனர்வாழ்வுக் குழுவினரையும் சந்திக்குமாறு அன் புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8458)

# முஷாரப்பின் போர் நிறுத்த யோசனை
# இந்திய அரச தரப்பால் நிராகரிப்பு

**இந்தியா- பாகிஸ்தானிடையேயான பிரச்சினைகளைத் தீர்க்க இரு நாட்டு எல்லையிலும், காஷ்மீரிலும் சண்டை நிறுத்தம் செய்யவேண்டுமென பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் யோசனை கூறியுள்ளதை இந்தியா நிராகரித்துள்ளது.**

எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் ஊடுருவலை நிறுத்திக் கொண்டாலே, துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய அவசியம் இருக்காது என்று இந்தியா கூறியுள்ளது.

பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய எம். பிக்கள் குழுவினர் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பை நேற்று முன்தினம் சந்தித்தனர்.

அவர்களுக்கு விருந்தளித்த முஷாரப். பிரதமர் வாஜ்பாய் விரும்பினால் இருதரப்புப் பிரச்சினைகள் பற்றி எப்போது வேண்டுமானாலும் அவருடன் தொலைபேசியில் பேசுவதற்கு தயாராகத்தான் இருப்பதாகக் கூறியுள்ளார். பிரச்சினைகளைத் தீர்க்க இரு நாட்டு எல்லைகளிலும் காஷ்மீரிலும் சண்டை நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முஷாரப்பின் யோசனையை இந்தியா நிராகரித்துள்ளது. டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு செய்தித் தொடர்பாளர் நத்தீஸ் ஷர்ணா இது போன்ற யோசனைகளை தெரிவிப்பது பாகிஸ்தானுக்குப் புதிதல்ல என்று கூறியுள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் ஏற்கனவே சண்டை நிறுத்தத்தை அமுல் படுத்திய போது எந்தச் சலனமும் ஏற்படவில்லை. ஆனால், பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக தீவிர வாதத்தை ஏவிவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

தீவிரவாதிகளுக்கு உதவி செய்வதை பாகிஸ்தான் நிறுத்திவிட்டு எல்லையில் தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுத்தாலே காஷ்மீரில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய அவசியம் இருக்காது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பிணையில் விடுதலை

முன்னாள் அமைச்சர் த.கிருட்டிணன் கொலை வழக்கில் கடந்த மே மாதம் கைது செய்யப்பட்ட மு.க.அழகிரியைப் பிணையில் விடுதலை செய்ய சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 11 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் சிறையிலிருந்து மு.க.அழகிரி விடுதலையாகியுள்ளார்.

# சவுதி தலைநகரில் மோதல்
# 4 பொலிசார் பலி; 15 பேர் காயம்!

(றியாத்)

சவூதி அரேபியத் தலைநகரான றியாத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மோதலொன்றில் 04 பொலிசார் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதி ஒருவரும் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இம் மோதலை 05 மணித்தியாலங்கள் வரை நீடித்ததாகச் சவூதிஅரேபியா தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை சவூதிப் பொலிசாருடன் துப்பாக்கிதாரிகள் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இம் மோதல் பிரித்தானிய நடவடிக்கைகளை சவூதிஅரேபியாவில் முறியடிப்பதற்கான செயற்பாடாகத் தான் கருதுவதாகப் பிரித்தானியா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இத் தாக்குதலில் ஈடுபட்டார்கள் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் இதுவரை 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மேற்குக்கரையில் இரு தற்கொலைத் தாக்குதல்
# இரு இஸ்ரேலியர் பலி; பன்னிருவர் காயம்!

பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதில் 02 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 12 பேர் படுகாயமடைந் துள்ளனர்.

பேருந்துத் தரிப்பிடமொன்றிலும் மற்றும் சுப்பர் மார்க்கெட்டிலும் இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இத் தாக்குதல்களுக்குக் கமாஸ் இயக்கம் உரிமை கோரியுள்ளது.

இதற்கான பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது என இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் வாக்குறுதியளித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைப் பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் கண்டனம் செய்ய வேண்டும் என்றும், இஸ்லாமியத் தீவிரவாதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, வளைகுடா நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அபாஸ், தமது கொண்டு மேற்குக் கரைக்கு விரைந்துள்ளார்.

அவர் கருத்து வெளியிடுகையில், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைக் கட்டுப் படுத்தவும், சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லவும் பலஸ்தீன அதிகாரசபை உரிய நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளார்.

இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்குமிடையே அமைதி உண்டாக்க எடுக்கப்படும் முயற்சிகளைப் பயங்கரவாதம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தடுக்க இயலாது. என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலும் கூறியுள்ளார். இந்தச் சம்பவங்களால் அமைதிக்கான முயற்சிகள் தடம் புரளவில்லையென்று வாஷிங்டனில் கொலின் பவல் குறிப்பிட்டுள்ளார்.



ஆப்கானில் பாடசாலை மாணவிகள் விளையாட்டில் ஈடுபடுகின்றனர். பெண்கள்மீது தலிபான்கள் ஆட்சியில் கடுமையான சட்டங்கள் அமுல் செய்யப் பட்டிருந்தமை தெரிந்ததே.

# வடகொரிய கப்பலில் இரசாயனப் பொருள் மீட்பு!

வடகொரியக் கப்பலில் கொண்டுவரப்பட்ட இரசாயனப் பொருட்கள் தாய்வானால் கைப் பற்றப்பட்டுள்ளன. 58 கொள்கலன்களில் இவை கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துறைமுகப்பொலிசார் தாம் கண்டறிந்த இரசாயனப் பொருட்கள் மிகுந்த ஆச்சரியத்துக்குரிய பண்டங்களெனத் தெரிவித்துள்ளனர். தாய்வானில் பிரதான துறைமுகமான பௌசிங் துறைமுகத்தில் இவற்றை இறக்கிவிடும் நோக்கத்துடன் இக் கப்பல் வந்துள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

பாங்கொக்கிலிருந்து புறப்பட்ட இக்கப்பல் திங்கட்கிழமை மாலை தாய்வான் துறைமுகத்தைச் சென்றடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. கொண்டு வரப்பட்ட இரசாயனப் பொருட்கள் எவை என்பது பற்றி தாய்வான் விபரங்களை வெளியிட மறுத்துள்ளது.

# கடுமையான அனல் காற்றால் ஐரோப்பாவெங்கும் திண்டாட்டம்!

ஐரோப்பிய நாடுகளில் கடுமையான அனல் வெப்பக் காற்று வீசிவரும் நிலையில் அந்நாட்டு மக்கள் பெரும் அவதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலேயே கோடைகாலம் என்பதால் அனல் காற்று வீசுகின்றது.

இதனால் ஜேர்மனியில் இரணடாம் உலகப் போரின் போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் அந்நாட்டு அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஜேர்மனியில் தீன்மூன் பகுதியிலேயே இந்தப் பணி தொடர்ந்துள்ளது. கோடை வெப்பம் காரணமாகக் கண்ணிவெடிகள் தானாகவே வெடிக்கக் கூடும் என்ற 'அச்சம் காரணமாகவே இந்தப் பணிகள் தொடரப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது. இதே போல் பிரான்ஸில் உள்ள முக்கிய அணுவுலைகள் அனைத்தும் கோடைகாலத்தையொட்டித் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பாரீஸ் நகரில் ஏராளமான முதியவர்கள் வெயிலில் சுருண்டு விழுவதால், அங்குள்ள மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் சுவிஸ்லாந்து நாட்டில், வரலாறு காணாத அளவுக்கு வெப்பநிலை பதிவாகியுள்ளதால் அங்கு உறைநிலையிலுள்ள பனிக்கட்டிகள் அனைத்தும் உருகி ஓடத் தொடங்கியுள்ளன.

இதனிடையே இத்தாலி நாட்டில் வெயிலுக்குப் பயந்து மக்கள் அனைவரும் கடற்கரைகளைச் சூழ்ந்துள்ளனர்.

# ஐந்து மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில் பா.ஜ.க.வை வீழ்த்த எதிரணியினர் வியூகம்!

(புதுடில்லி)

விரைவில் நடைபெறவுள்ள ராஜஸ்தான் உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கான சட்டமன்றத் தேர்தல்களில், நாடாளுமன்றத் தேர்தல்களிலும் கையாள வேண்டிய உத்தி குறித்துக் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள்ஒன்று கூடி விவாதிக்கவுள்ளனர்.

காங்கிரஸ் ஆளும் மாநிலங்களைக் கைப்பற்ற பாரதீய ஜனதா தீவிரமாக முயற்சித்து வரும் நிலையில் எதிர்கட்சிகளும் பதில் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றன.

டில்லியிலுள்ள மார்க்ஸிச கம்யூனிஸ்ட் தலைவர் சோம்நாத் சட்டஜி இல்லத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, கம்யூனிஸ்ட் தலைவர்கள் கார்சிங் சுஜித், ஜோதிபாயு, முன்னாள் பிரதமர் தேவகௌடா, சமாஸ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம் சிங்யாதேவ் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாரதீய ஜனதாக் கட்சியைத் தேர்தலின் போது ஒன்று சேர்ந்து எதிர்ப்பது குறித்தும், நாடாளுமன்றத்தில் ஒற்றுமையாக செயற்படுவது பற்றியும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.



மொன்ரோவியாவில் நைஜீரிய சமாதானப் படைவீரர் ஒருவர் லைபீரிய சிறுவனொருவனைத் தூக்குவதை அவதானிக்கும் மக்கள்.

# இடி அமீனுக்கு அச்சுறுத்தல்!

(றியாத்)

உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் உகண்டாவின் முன்னாள் சனாதிபதி இடி அமீனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக சவூதி அரேபியாவின் ஜித்தா நகர வைத்தியசாலையில சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் சர்வாதிகார சனாதிபதியான இடி அமீனுக்குத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டதனையடுத்து வைத்தியசாலையில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊழியர் சங்கங்களுக்கு தமிழக அரசினால் தடை!

(சென்னை)

சட்டவிரோத வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர் சங்கங்களின் அங்கீகாரத்தை தமிழக அரசு ரத்துச் செய்துள்ளது.

தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தமிழ் நாடுஅரச ஊழியர் ஒன்றியம், தலைமைச்செயலக ஒன்றியம் உட்பட்ட அனைத்துச் சங்கங்களின் அங்கீகாரத்தையும் தமிழக அரசு ரத்துச் செய்துள்ளது.

அத்துடன் இந்த நடவடிக்கை உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்படாத ஊழியர் சங்கங்களான பொட்டாஜியோ,ஜாக்டோஜியோ என்பனவற்றுடன் இணைந்து அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் உட்பட்ட பல்வேறு சங்கங்களும் ஒன்றிணைந்து கடந்த 2ஆம் திகதி காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தைத் தொடங்கியிருந்தன.

உச்ச நீதிமன்றம் அரச ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்ட விரோதமானது என்றும் கூறியதையடுத்து,

அரச ஊழியர் சங்கங்கள் விதிமுறைக்கு மாறாக அங்கீகரிக்கப்படாத சங்கங்களுடன் இணைந்து போராட்டம் செய்வதாக, தமிழ்நாடு அரச அலுவலர் ஒன்றியம், தலைமைச்செயலக சங்கம், தமிழ்நாடு அரச ஓட்டுனர் சங்கம், கல்லூரி ஆசிரியர் சங்கம், பட்டதாரி ஆசிரியர் சங்கம் என 200க்கும் மேற்பட்டசங்கங்களின் அங்கீகாரத்தை ரத்துச் செய்து அறிவித்துள்ளது.

# லைபீரிய சனாதிபதியின் வெளியேற்றம்... சமாதானத்தை ஏற்படுத்துமா...

உலக அரசியலில் லைபீரிய நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பம் அனைவரையும் ஒருகணம் தன்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

மேற்காபிரிக்க அமைதிப் படையினர் தரையிறக்கம; லைபீரிய சனாதிபதி சார்ளஸ் ரெயிலர் பதவி விலகல; துணை சனாதிபதி பொறுப்பு ஏற்பு... என பல விடயங்கள் அந்நாட்டில் ஏற்பட்டுள்ள திருப்பத்திற்குக் காரணமாக உள்ளன.

கிட்டத்தட்ட கடந்த 14 ஆண்டுகளாக லைபீரியா உள்நாட்டுப் போரினால் அல்லாடிக்


சார்ளஸ் ரெயிலர்

கொண்டிருக்கின்றது. துப்பாக்கி சத்தம், மரண ஓலம் என்பன அங்கு நாளாந்த சம்பவங்களாகியதால், மக்கள் அமைதி ஏற்படுவது எப்போது...? என எதிர்பார்த்து இருந்தமைக்கு, தற்போது விமோசனம் கிட்ட லாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

லைபீரிய சனாதிபதி சார்ளஸ் ரெயிலர் "2004இல் தான் எனது பதவிக்காலம் முடிவடைகின்றது. அதற்கு முன்னர் ஒரு போதும் என்னால் பதவி விலக முடியாது" என பிடிவாதம் செய்த போதும் சர்வதேச அழுத்தம் காரணமாக, குறிப்பாக அமெரிக்கா வின் அழுத்தம் காரணமாக பதவி விலகி, அந்நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இவரது பதவி விலகல் தமது இருண்ட வாழ்வில் ஒளி விளக்காகத் திகழும் என மக்கள் ஆரவாரம் செய்வதாகக் கூறப்படுகின்றது.

மறுபுறம் லைபீரியாவின் பொறுப்புக்களை ஏற்றுள்ள துணை சனாதிபதி மோசஸ் பிளாஹ் பதவி ஏற்ற மறுகணமே கிளர்ச்சியாளர்களை பேச்சுவார்த்தைக்கு வருமாறு நேசக்கரம் நீட்டியுள்ளமை நன்மையளிக்குமா... என பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டுள்ள விடயமாகும்.

அத்துடன் அழிவிலுள்ள தமது நாட்டை மீட்டெடுக்க உதவுமாறு அமெரிக்காவிடம் வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

லைபீரியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரைத் தீர்க்க ஏனோ அமெரிக்கா முயற்சி எடுக்கவில்லை என்பதுடன், அங்கு அமைதியை ஏற்படுத்த நினைக்கவுமில்லை என்று தான் அவதானிகளின் கணிப்பாக உள்ளது.

லைபீரியாவில் ஆட்சி செய்பவர்கள் 1820இல் அமெரிக்காவினால் விடுவிக்கப்பட்ட அடிமைகள் தான். இந்த அடிமைகள் ஆபிரிக்க கரையோரமாக அனுப்பப்பட்ட போதுதான் அவர்கள் குடியேறிய இடத்தை 1847இல் லைபீரியா என முத்திரை குத்திக் கொண்டனர் என்று கூறப்படுகின்றது.


இருண்ட ஆபிரிக்கக் கண்டத்தின் முதல் குடியரசு நாடு லைபீரியா என்றும் வர்ணிக்கப்பட்டது, அப்போது,

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் அமெரிக்காவுக்கு லைபீரியா பலவழிகளிலும் அதாவது கவர்ச்சிகரமான, ஆடம்பர பொருள் போன்று இருந்ததாகவும், தற்போது அமெரிக்காவுக்கு கவர்ச்சியற்ற வேண்டாத பொருள் போல லைபீரியா இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அதனால் தான் ஈராக் விடயத்தில் மக்கள் அமைதியை கேட்பதாகவும், அதையே விரும்புவதாகவும் ஈராக் மீது போர் தொடுத்த அமெரிக்கா, லைபீரியாவில் உள்நாட்டு கலவரத்தால், சண்டையால் நாளும் பல உயிர்கள் பலியாவதைப் பார்க்கின்றது தானே... ஏனோ அது லைபீரிய மக்களுக்கு அமைதியைக் கொடுப்பேன் என முன்நிற்க முற்படவில்லை.

அது மட்டுமன்றி அடுத்தவர் விடயங்களில் மூக்கை நீட்டித் தானாக உள்நுழைவதில் அமெரிக்காவுக்கு நிகரான நாடு எதுவுமில்லை. அப்படி இருக்கும் போது லைபீரியா விடயத்தில் பேசா மடந்தையாக இருப்பது ஏன்... என்றும் வினா எழுப்பப்பட்டுள்ளது.

ஏனெனில், தனக்கு இலாபம் இல்லாத விடத்து அமெரிக்கா ஒருபோதும் மற்றைய நாடுகளின் விடயங்களில் தலையிட்டதில்லை.


புஷ்

லைபீரியாவால் தனக்கு எவ்வித பலன்களும் இல்லை என்பதனால் தான் அது தூர நின்று நடப்பதை பார்ப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

முன்பு, லைபீரியாவுக்கு தொலைத் தொடர்பு சேவை, விமான சேவை, தனது வானொலிச் சேவை.... எனப் பல சலுகைகளை வழங்கியமைக்கு காரணம் இல்லாமலில்லை என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆபிரிக்க நாடுகளில் கம்யூனிஸம் பரவாது தடுக்க லைபீரியாவை தளமாகப் பயன்படுத்தியதே தவிர வேறு ஒன்றுமே இல்லை எனும் கருத்து இதிலிருந்து மேலெழுந்து நிற்கின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது லைபீரியாவின் றப்பர், அமெரிக்காவுக்கு அத்தியாவசியமானதொன்றாக விளங்கியதால், லைபீரியாவை கைக்குள் போட்டுக் கொண்ட அமெரிக்காவுக்கு, இன்றைய உற்பத்திகளின் உச்ச நாயகமாகத் தான் விளங்குகையில் லைபீரியா என்பது வேண்டாத நாடு தானே... என்று கருத்துக் கணிப்புகள் எடுத்துரைக்கின்றன.

மறுபுறம் அமெரிக்கா லைபீரியாவின் விடயத்தில் தலையிட வேண்டும் என்று பரவலாக அழுத்தம் கொடுக்கப்பட்டது, கொடுக்கப்படுகின்றது. அதில் முதன்மை வகிப்பது பிரிட்டன் தான்.

ஆனால் அமெரிக்காவோ அழுத்தங்களை ஏற்பதா... விடுவதா... என திண்டாடுவது போல் தெரிகின்றது. அதனால் தான் கிளர்ச்சியாளர்களின் கோரிக்கையை ஏற்பது போல். சார்ளஸ் ரெயிலரை வெளியேறுமாறு அழுத்திக் கூறியது எனலாம்.

அமெரிக்கா, தானே உள்நுழைந்த இடங்களிலெல்லாம் இன்னும் அமைதி திரும்புவதாகத் தெரியவில்லை. அந்த வகையில் ஆப்கானிஸ்தானில் நேட்டோ படை அமைதி காக்கும் பணியில் இறக்கப்பட்டுள்ளது. ஈராக்கிலோ நாளும் தொடராக அமெரிக்க-பிரிட்டிஷ் படையினர் பலியாகி ன்றனர்.....எனவே புதிதாக லைபீரியாவில் அமெரிக்கா தலையிடுமா... என்பது சந்தேகமே என ஒரு சாரார் வாதிடுகின்றனர்.

எனவே புதிய லைபீரிய சனாதிபதி மோசஸ் பிளாஹ் கேட்டுள்ள கோரிக்கையை எப்படித் தான் அமெரிக்கா நிறைவேற்றப் போகின்றது என்பது பரபரப்புடன் எதிர்பார்க்கப்படுகின்ற விடயமாகும்.

லைபீரியாவில் உள்நாட்டுப் போரினால் மட்டும் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

எனவே சர்வாதிகாரமாக ஆட்சி செய்ததாகக் கூறப்படும் சார்ளஸ் ரெயிலர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில் அந்நாட்டில் அடுத்து நிகழப்போவது என்ன...என்பது பெரியளவிலான எதிர்பார்ப்பாகும்.

கிளர்ச்சியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமா... போராட்டங்கள் கைவிடப்பட்டு உயிரிழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா...

அல்லது மீண்டும் உள்நாட்டு போர் தொடருமா... என்பன எல்லாவற்றுக்குமான விடைகள் தற்போதைய துணைசனாதிபதியின் கைகளில்தான் இருப்பதாக மக்கள் நம்பு கின்றனர். அவரோ எல்லாமே அமெரிக்காவிடம் தான் என்பதுபோல் அமெரிக்காவை உதவிடுமாறு கோருகிறார்.

அதுமட்டுமன்றி கிளர்ச்சியார்களிடம் துணை சனாதிபதி பொறுப்பையும் கொடுக்கத் தயார் என்று அறை கூவல் விடுவது சாத்தியப்படுமா... என்பதுடன் முன்னைய சனாதிபதியின் துணை சனாதிபதி இவர் என்பதால் அவரது கொள்கைகள், கருத்துக்கள் இவரிடம் எதிரொலிக்காது என்பதற்கு உத்தரவாதம் எதுவுமே இல்லை.


மோசஸ் பிளாஹ்

சார்ளஸ் ரெயிலர் பதவி விலகி வெளியேறியதும் அமைதிப்படை வருகையும் துணை சனாதிபதி பொறுப்பு ஏற்றுக்கொண்டதுமான நிகழ்வுகள் மட்டும் அந்நாட்டின் பிரச்சினைகளுக்கு, சிக்கல்களுக்குத் தீர்வாகி

*அ. கலைவாணி*

விடாது என்றும் லைபீரியா உள்நாட்டுப் போரிலிருந்து விடுபட்டு அமைதியைக் கண்டுள்ளதாக கூறிவிடவும் முடியாது என்றும் அவதானிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் அமெரிக்கா லைபீரியாவுக்கு அண்மையில் 69மில்லியன் டொலர்களை மனிதாபிமான அடிப்படையில் வழங்கியுள்ளது.

இதனை நோக்குகின்றவர்கள் அமெரிக்கா எட்ட நிற்பதில்தான் குறியாகவுள்ளது என்றும், நிதியுதவிகள் மட்டும் அந்நாட்டு மக்களுக்கு விமோசனத்தைத் தேடித் தந்திடுமா... என்றும் வினா எழுப்பியுள்ளனர்.

எனவே உறவுகளை, சொத்துக்களை, வீடு வாசல்களை... இழந்து தவிக்கும் லைபீரிய மக்கள் சந்தோஷ விடியலை எட்டுவது எப்போது...? லைபீரியா அமைதியடைவது எப்போது...? அது எதிர்காலத்தில் சாத்தியமாகுமா...?

## ஏ-9, பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புனரமைப்பு நிர்மாணப் பணிகளுக்குத் தடை!

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான வீதி, மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பிட்ட, நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் தற்காலிகமாகவேனும் புனரமைப்பு மற்றும் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திணைக்களங்களுக்கோ அல்லது தனியார் நிறுவனங்களுக்கோ அனுமதி வழங்க வேண்டாம்.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற அத்தியாவசியக் கூட்டத்தில் வைத்துக் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் பிரதேசச் செயலர்களுக்கு மேற்படி பணிப்புரையினை விடுத்துள்ளார்.

நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக் கப்பால் கட்டடங்களையோ அல்லது கம்பங்களையோ அமைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த பொழுதிலும் மேற்படி எல்லைக்குள் உள்ள சில கட்டடங்கள் தற்போதும் புனரமைக்கப்பட்டு வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் தலையிட்டு மேற்படி நடவடிக்கையில் ஈடுபடுபவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என வேண்டியதுடன் தற்காலிகமாக வேனும் எவரும் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள அனுமதி வழங்கக் கூடாதெனப் பிரதேசச் செயலர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (சோ)

## தாய்லாந்துப் பிரதமரை வரவேற்க ஒத்திகை!

(கொழும்பு)

தாய்லாந்துப் பிரதமர் இன்று சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இவரை கொழும்பு விமான நிலையத்திலிருந்து அழைத்துச் செல்வது பற்றிய ஒத்திகை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர் இன்று மாலை 3.00 மணியளவில் பிரதமரைச் சந்தித்துப் பேசவுள்ளார். இவர் சமாதான முயற்சிகள் குறித்து கேட்டறிவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் பல ஆண்டுகளுக்குப் பின்னர் தாய்லாந்துப் பிரதமர் சிறிலங்கா நாடாளுமன்றத்திலும் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தம்

வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி கிளி.அக்கராயன் மகாவித்தியாலயத்தி லிருந்து வர்த்தகப் பிரிவில் தோற் றிய சோ. சுமணா -3ஏ பெற்று மாவட்ட மட்டத்தில் 12ஆவது நிலையையும் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக முன்னர் வெளியான செய்தியில் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

## சம்மாந்துறை அபிவிருத்திக்கு ரூபா 500 கோடி

சம்மாந்துறைப் பிரதேசம் 500 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இந்த வாரத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் கூறியுள்ளார்.

வடக்கு அபிவிருத்தி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, கிழக்கு அபிவிருத்தி அமைச்சு மற்றும் சனாதிபதி நிதியம் என்பவற்றிலிருந்து இந்த நிதி பெறப்படவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## சுற்றுலா சென்ற ஆசிரியர் இருவர் நீரில் மூழ்கி மரணம்!

மட்டக்களப்பு நகரிலிருந்து வாகரைப்பகுதிக்கு கல்விச் சுற்றுலா சென்றிருந்த ஆசிரியர்களில் இருவர் கடலில் மூழ்கி இறந்தனர். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வாகரை பாலை சீமைப் பகுதிக் கடலில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு கூழாவாடியைச் சேர்ந்த வைத்தியநாதன் நிரோஸ் கண்ணன் (வயது-23), வின்சன் சுதாகரன் (வயது-26) ஆகிய இரு ஆசிரியர்களுமே கடலுக்கு பலியாகியுள்ளனர். மட்டக்களப்பிலிருந்து 116 பாடசாலை மாணவர்களும் ஆசிரியர் குழுவொன்றும் கல்விச் சுற்றுலாவில் கலந்து கொண்டிருந்தனர். வாகரைக்குச் சென்ற இவர்களில் பலர் மதிய உணவிற்கு முதல் கடலில் குளிக்கச் சென்றுள்ளனர். மாணவர்களுடன் ஆசிரியர்களும் சென்றிருந்தனர்.

இதேவேளையில் பாரிய அலையொன்றினால் ஆசிரியர் ஒருவர் இழுத்துச் செல்லப்படவே அவர் அபயக்குரல் எழுப்பியுள்ளார். இதனையடுத்து சக ஆசிரியர் அவரைக் காப்பாற்ற ஆழமான நீர்ப் பகுதிக்கு நீந்திச் சென்று நீரில் மூழ்கிக் கொண்டிருந்த ஆசிரியரைக் காப்பாற்ற முனைந்துள்ளார். அப்போது இரண்டு ஆசிரியர்களும் நீரில் மூழ்கினர்.

# இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினைகளின் முடிவு...?



### சண்டையிட்டுக் கொள்பவர்கள் யார்?

மத்திய கிழக்கில் இஸ்ரேலிய யூதர்களுக்கும் அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலப்பகுதியில் உரிமையாளர்களான அராபிய முஸ்லிம்களுக்கும் இடையே பிரதானமாக பிரச்சினை நிலவுகின்றது.




### ஏன் அவர்கள் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும்?

மிக இலகுவான பதில் "நிலத்திற்காக பலஸ்தீனியர்கள் சுதந்திரதேசம் ஒன்றை அமைக்க விரும்புகின்றனர். ஆனால் இஸ்ரேலியர்களோ தமது கட்டுப்பாட்டை இழந்து விட்டால் தாம் வாழ்வதற்கு போதுமானளவு பாதுகாப்பு இருக்காது" என ஆதங்கப்படுகின்றனர். இவர்களுக்கிடையே சண்டை நடைபெறும் பிரதான பகுதிகளாக மேற்குக்கரை, காஸா ஆகிய பகுதிகள் பொதுவாக அறியப்படுகின்றன. இவ்விரு இடங்களிலேயே பலஸ்தீனியர்கள் செறிந்து வாழ்கின்றனர். எனவே அவர்கள் இப்பகுதிகளில் தமது முழுமையான ஆதிக்கத்தை விரும்புகின்றனர். ஆனால் எவ்வளவு நிலத்தை அவர்களுக்கு வழங்குவது என்பதில் அவர்களோடு இஸ்ரேலியர் இணங்கிப் போகவில்லை.

### இவ் நிலத்தின் உரிமையாளர்கள் யார்?

வேதாகம (பைபிள்) காலப்பகுதியில் இஸ்ரேலியர்களே அப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். ஆனால் கி.பி.800 அளவில் இப்பகுதி அரேபியரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பெரும் பாலான யூதர்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறு வதற்கு



நிர்ப்பந்திக்கப்பட்டனர். இப்போதும் கூட யூதர்கள் இவ் வரலாற்றுப் பிரதேசமே தமது தாய்நாடு என நம்புகின்றனர். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அவர்கள் இப்பிர தேசத்திற்கு திரும்பத் தொடங்கினர்.

2ஆம் உலகப் போருக்குப் பின் யூதர்கள் ஹிட்லருடைய நாஸிகளின் மிக பயங்கரமான அச்சுறுத்தலை எதிர்நோக் கினர். அவர்கள் தமக்கென ஒரு தேசத்தை உருவாக்கிக் கொள்வதற்கு பெருமளவில் ஆதரவு அவர்களுக்குக் கிடைத் தது. 1947இல் பலஸ்தீனத்தை அரேபியருக்கும், யூதர்களுக் கும் என இரு பகுதிகளாகப் பிரிப்பதற்கு ஐ.நா. சபையில் வாக்களிக்கப்பட்டது. யூதர்கள் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு 1948 மே 14ஆம் நாள் சுதந்திர இஸ்ரேல் தேசத்தை பிரகடனப் படுத்தினர். ஆனால் அரேபியர்கள் அதனை நிராகரித்து விட்டனர். தமக்கு கணிசமானளவு நிலப்பகுதி தரப்படவில்லை எனக் கூறத் தொடங்கினர். இருவருக்கும் இடையிலான பிணக்குகள் ஆரம்பித்தது.

### எத்தனை போர்கள் நடைபெற்றுள்ளன?

1948இல் இஸ்ரேலியர்களின் சுதந்திர பிரகடனத்திற்கு மறுதினமே மிகப் பெரிய தோர் போர் வெடித்தது. ஒரு மில்லியனுக்கும் அதிகமான இஸ்ரேலியர்களும், அரேபியர் களும் அகதிகளாகினர்.

1956, 1967, 1973 மற்றும் 1983 ஆகிய காலப்பகுதிகளில் போர்கள் நடைபெற்றன. ஒவ்வொரு முறையும் இஸ்ரேலியர்கள் மென் மேலும் அதிகளவு நிலப்பகுதியை கைப் பற்றிக் கொண்டனர். அதன்பின் அவர்கள் ஒருவருக்கொருவர் ஜென்மப் பகையாளி களாகிவிட்டனர். பலஸ்தீனியர்கள் தமது மக்களை இஸ்ரேலுக்கு எதிராகப் போரிட தூண்டிவருகின்றனர். இவ் வாறான முதலா வது சந்தர்ப்பம் 1987இல் நிகழ்ந்தேறியது.

இரண்டாவதாக 2000ஆம் ஆண்டில் தொடங்கி இன்று வரை தொடர்கின்றது. நாம் இப்போது அடிக்கடி செவிமடுக்கும் தற்கொலை குண்டுத் தாக்குதல்களுக்கும் வழிவகுத்துள்ளது.

### தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவோர் யார்?

எதிரிகள் நெருக்கமாக உள்ள இடங்களில் தம்முடன் வெடிகுண்டுகளை எடுத்துச் சென்று வெடிக்க வைப்பதன் மூலம் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளுகின்றனர் இவர்கள். தங்களுடைய நோக்கத்திற்காக சாவை தழுவு வதற்கு பலஸ்தீனியர்கள் ஒன்றிணைவதில், தங்களுக்கு ஆட்பற்றாக்குறை இல்லை என்பதை இது எடுத்துக் காட்டு கின்றது. குறிப்பாக 20 வயதுக்குட்பட்ட திருமணமாகாத இளைஞர்களே தம்மை இவ் வாறு மாய்த்துக் கொள்கின் றனர். இளம் பெண்கள், கூட தங்களது உயிர்களைத் தியா கம் செய்கின்றனர். தாங்கள் மரணத்தின் பின் நேரடியா கவே சுவர்க்கத்திற்குச் செல்வ தாகவும், கடவுளுக்கு அடுத்த இடத்தில் வைத்து கௌரவிக் கப்படுவதாகவும் நம்புகின்றனர்.

### சமாதானத்தை நோக்கிய முன்னேற்றங்கள் ஏதாவது காணப்பட்டதா?

1988இல் பலஸ்தீன விடுதலை இயக்கம் **(Palestine Liberation Organisation - PLO)** இஸ்ரேலியர் களது சுதந்திர தேசத்திற்கான உரிமையை ஏற்றுக்கொண்டது. இஸ்ரேலும் அவ் இயக்கத்தை அங்கீகரித்ததோடு, மேற்குக் கரை, காஸாப் பகுதிகளில் இருந்து வெளியேறச் சம்மதித்தது. 1993இல் "ஒஸ்லோ உடன்படிக்கை" என அழைக்கப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்றில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டனர். அது மட்டுமல்லாமல் கணி சமானளவு முன்னேற்றங்களைக் கொண்ட மற்றுமொரு ஒப்பந் தம் ஒன்றிலும் கையெழுத்திட்டனர். எவ்வாறு இருந்த போதி லும் சமாதான முயற்சிகள் மெதுவாகவே நகர்ந்தன.

### பிரதான தலைவர்கள் யாவர்?

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனத் தலைவர் யாஸிர் அரபாத்( பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்) அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ் ஆகியோர்களே பிரதான தலைவர்களாக உள்ளனர். இருதரப் புப் பேச்சுக்களில் அமெரிக்காவே பிரதான பங்காற்றுகின்றது. முன்னாள் சனாதிபதி பில் கிளிங்டன் மிகப் பெரிய பங்காற்றி யிருந்தார்.

2003 ஏப்ரலில் பலஸ்தீனத்திற்கு முதற்தடவையாகப் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பலஸ்தீன அமைச்சரவை இப்போது பிரதமர் முகமட் அப்பாஸினால் தலைமை தாங்கப் படுகின்றது. எதிர்காலத்தில் இவரே எந்தவொரு தீர்வு முயற்சியிலும் பிரதான பங்கை வகிப்பார் எனக் கருதப்படு கின்றது.

### எதிர்காலத்தில் நடைபெற வேண்டியவை எவை?

2003ல் கோடைகாலப் புதிய பேச்சுக்கள் இடைநடுவில் முறிந்து போனது.இரு தரப்பினரும் ஜெருசலேம் நகரத்தைத் தமது தலைநகர் எனக் கூறிக்கொண்டிருப்பதால் அது தொடர்பாக அவர்களால் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரமுடியா மல் இருந்தது. அதன்பின் வன்முறைகள் மோசமடையத் தொடங்கின. இருவரும் பேச்சுவார்த்தைக்கு இணங்கினாலும் ஒருவருக்கொருவர் மற்றவரின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டுள்ளனர்.

2003ல் ஐரோப்பிய யூனியன், ரஷ்யா,ஐ.நா ஆகியவற்றைச் சேர்ந்த சர்வதேச இராஜதந்திரிகளிடம் அமெரிக்கா தனது சமாதானத் திட்டவரைவைக் கையளித்தது. இவ் திட்டவரைவு நிலம் தொடர்பான சச்சரவுகளையும், வன்முறைகளுக்குக் காரணிகளாக இருப்பவற்றையும் களைந்துவிடும் என நம்பப் படுகின்றது. இவ்வரைவு 2005ல் பலஸ்தீன தேசத்தை உத்தி



யோகபூர்வமாக உருவாக்கும் என நம்பப்படுகின்றது.

- உடனடியாக வன்முறைகளை நிறுத்துதல்.
- பயங்கரவாத அமைப்புக்களைச் செயலிழக்கச் செய்தல்
- பலஸ்தீன நகரங்களில் இருந்து இஸ்ரேலியப் படைகளை வெளியேற்றுதல்.
- 2001ல் இருந்து நிகழும் யூதக் குடியேற்றங்களை வெளி யேற்றுதல்.

போன்றன இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாக இருக்கின்றன.

தமிழில்: **தேவராஜா ஜீ. செல்வமதி**

## வவுனியாவில் புரிந்துணர்வின் பின்னர் 4,500 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(வவுனியா)

"வவுனியா மாவட்டத்தில் புரிந்துணர்வு உடன்படிக் கைக்குப் பின்னர் 4500 குடும்பங்கள் மீளக் குடியேறி யுள்ளனர்" என மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

இன்றும் பல குடும்பங்கள் மீளக் குடியேற விருப்பம் தெரிவித்துள்ள போதிலும் சில கிராமங்கள் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுவதாகவும் அத்துடன் வீதி புனரமைப்பு, குடிநீர், கல்வி வசதி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மீளக்குடியேறும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 30 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளது.

அத்துடன் நியாப் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 100 குளங்கள் புனரமைப்பு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் 20 விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் உள்ளவையாகும்.

## 11 மீனவர்கள் கைது !

இலங்கையின் வடகடலில் அத்துமீறி இரு றோலர் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 11 இந்திய மீனவர்களை நேற்று முன்தினம் சிறிலங்கா கடற் படையினர் கைது செய்துள்ளனர்.

மேற்படி 11 மீனவர்களையும் இரு றோலர் படகுகளை யும் மேலதிக விசாரணைகளுக்கென கடற்படையினர் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## 'சார்க்' வைத்திய நிபுணர்கள் பங்கேற்கும் 4 நாள் மாநாடு - கண்டியில் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

சார்க் நாடுகளின் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அமைப்புக்களின் ஒன்றியம் அதன் இலங்கைக் கிளையுடன் இணைந்து நடத்தும் சர்வதேச மாநாடு இன்றுமுதல் 17ஆம் திகதிவரை கண்டியில் நடைபெற வுள்ளது.

"அறுவைச் சிகிச்சையின் தரத்தைப் பேணுதல்" எனும் தொனிப் பொருளிலான இந்த மாநாட்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் ஆகிய சார்க் நாடுகள் உட்பட, அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், ஜப்பான், மலேசியா, அவுஸ் ரேலியா, ஜேர்மனி போன்ற நாடுகளைச் சேர்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

# தற்போதைய சூழல் எப்போதும் இருந்ததில்லை சமாதானம் என்பது பலவீனமாகவே உள்ளது



## -'பிஸ்னஸ் டைம்ஸ்'சில் ஜீ.எல். பீரிஸ்

**விடுதலைப்புலிகளுடன் அரசு செய்து கொண்டிருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மூலம் பெரும் நன்மைகளை அடைந்திருக்கின்றோம். ஆனாலும் இறுதி இணக்கப்பாடு எட்டப்படும் வரை சமாதானம் எளிதில் முறிவடைந்து விடக் கூடிய தன்மையையே கொண்டிருக்கிறது என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கடந்த 03 மாத காலத்தில் வெளிநாட்டு முதலீடு மற்றும் உல்லாசப் பயணத்துறை ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதாகவும், இதற்கு அமைதி நிலவுவதுதான் காரணம் என்றும் பிஸ்னஸ் டைம்சுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவர் கூறியுள்ளார்.

அவர்மேலும் கூறியிருப்பதாவது:-

20 ஆண்டுகாலப்பகுதியில் தற்போது கடைப்பிடிக்கப்படும் யுத்த நிறுத்த உடன்படிக்கை தான் நீண்ட காலத்திற்கு மேற்கொள்ளப்படுகின்றது."

ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் ஏப்பிரல் 22 முதல் தற்காலிகமாக சமாதானப் பேச்சுவார்த்தை இடை நிறுத்தப்பட்டது.

ஆனால், நோர்வே அனுசரணையாளர்களின் உதவியுடன் செப்ரெம்பரில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்.

தற்போதுள்ளது போல என்றைக்குமே சமாதானத்திற்கான நல்ல வாய்ப்பு இருந்ததில்லை. ஆனால், இறுதி உடன்படிக்கை ஒன்று சாத்தியமாகும்வரை சமாதானமென்பது பலவீனமானதாகவே இருக்கின்றது. மனநிறைவு கொள்வதற்கான எந்த நியாயங்களும் இல்லை.

சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான உறவில் ஓரளவு பதற்றம் இருக்கின்றது. ஆனாலும் அவர்களுக்கிடையில் அடிக்கடி ஆலோசனைகள் இடம் பெறுகின்றன.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் சுயாட்சி பெறுகின்ற சந்தர்ப்பத்தில் சகல சமூகங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான சிறந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். சிறுபான்மையினரது உரிமைகளும், தேவைகளும் கவனத்திற்கொள்ளப்படும். எந்த வகையிலும் அவர்களது உரிமைகள் புறக்கணிக்கப்படமாட்டாது.

அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு மீளக் குடியமர்வதில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலைமைக்கு அவர்கள் மத்தியிலான நம்பிக்கையீனமே காரணமாகும். இந்த நம்பிக்கை ஏற்படுவதற்கு காலம் தேவை என்றும் கூறியுள்ளார்.

## கப்பலேந்தி மாதா திருநாள்

(வடமராட்சி கிழக்கு)

கடந்த 12 வருடங்களின் பின் கட்டைக்காடு கப்பலேந்திமாதா திருநாள் நாளை 15ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

இந்த ஆலயத்தில் 90ஆம் ஆண்டுக்குப்பின் இப்போதுதான் திருநாள் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. 1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டது. அப்போது இப்பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து, 1999ஆம் ஆண்டு ஓயாத அலைகள் மூலம் இப்பிரதேசம் மீட்கப்பட்டது

அதன் பின் மக்கள் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்ததுடன் முற்றாக அழிந்த ஆலயத்தையும் ஓரளவேனும் திருத்தியமைத்துள்ளனர்.

(11)

## அடிப்படை வசதிகள் எதுவுமின்றி நாயாற்றில் மக்கள் அவலம்!

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதி மக்கள் 1984ல் இடம்பெயர்ந்து 2003 தை மாதத்திலிருந்து மீளக்குடியேறி வாழும் சுமார் 20 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகவும அவலவாழ்க்கை வாழ்வதை அவதானிக்க முடிந்தது.

குடிநீருக்கான கிணற்று வசதியில்லை, சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கான ஒருமுன்பள்ளி இல்லை, மருத்துவ வசதி, மலசல கூட வசதியில்லை பொருட்கள் வாங்குவதற்கான கடைகள் இல்லை,எரிபொருள் இல்லை, இவற்றையெல்லாம் பெற வேண்டுமானால் செம்மலைக்கே செல்ல வேண்டும்.அரச சார்பற்ற நிறுவனங்கள் பார்த்துவிட்டுச் செல்கின்றனவே தவிர எமக்கு எந்தவசதியும் ஏற்படுத்தித் தரவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தற்போது தமிழீழ போக்குவரத்துக் கழகத்தின் இரு பேருந்துகள் மட்டுமே இவ்விடம் வந்துபோகின்றன.

எமக்கு குடிநீர்,எரிபொருள், பாடசாலைஎன்பனமுதல் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனத்தில் எடுத்து எம்மையும் எல்லா மக்களைப் போன்று பார்க்கவேண்டும் என்றும்மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இவற்றுடன் கரைதுறைப்பற்று பகுதியெங்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக ரூபா 25000 வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால், எமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. கிராம அலுவலரை நாம் தொடர்புகொள்ள வேண்டுமானால் 3 மைல் சென்றே எமது தேவையை நிறைவேற்ற வேண்டியுள்ளது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# கடன் மீளல் சட்ட மூலங்கள் இரண்டு அரசியல் யாப்பிற்கு முரணானவை

### உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டுநகல் சட்டமூலங்கள் அரசியல் யாப்புக்கு முரணானவை என்று இரண்டு வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வங்கிகள் கடனை மீளப்பெறுவது மற்றும் கடன்மீட்புத்தொடர்பான நகல் சட்ட மூலத்தை எதிர்த்தே மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு சட்ட மூலங்களும் வர்த்தக வங்கிசட்ட மூலங்களுக்கும் சிறப்புரிமைகளை வழங்குவதாக மனுத்தாக்கல் செய்தவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தச்சட்ட மூலங்கள் அரசியல் யாப்பின் 12ஆவதுவாசகத்தை மீறுவதாகவும், இச்சட்ட நகல்மூலத்தை நிறைவு செய்வதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மக்கள் கருத்துக்கணிப்பும் அவசியம் என்றும் மனுதாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.



உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனா சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீன சனாதிபதி ஹுஜிந்டாஓ வை செவ்வாயன்று சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

# சூழல் பாதுகாப்பைக் கருதி அமைப்புக்கள் மரநடுகைத் திட்டத்தை முன்னெடுக்கவேண்டும்

### கிளி. அரச அதிபர் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

சூழல் பாதுகாப்புக்கான மர நடுகையினை அமுல்படுத்துவதற்கு சகல திணைக்களத்தினரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளி. மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அரச, அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளிடம் கிளி. அரசஅதிபர் தி. இராசநாயகம் வேண்டுகை விடுத்தார்.

போர் அனர்த்தங்களின் விளைவாக எமது மண்ணில் இருந்த பாரிய மரங்கள் அழிந்துபோயுள்ளன.

எனவே, மீண்டும் சூழல் பாதுகாப்பினைக்கருத்திற்கொண்டு மர நடுகையினை மேற்கொள்ள வேண்டியது இங்குள்ள சகலரதும் தலையாய கடமையாகும்.

ஆகையினால், முன்னோடியாக ஒவ்வொரு திணைக்களமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் குறைந்தது 10 மரங்களையாவது நாட்ட முன்வர வேண்டும் எனவேண்டிக் கொண்டார். (சோ)

# விசேட பொலிஸ் பிரிவின் செயற்பாடு வெற்றியளிப்பு

### -ஜோன் அமரதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நாட்டின் குற்றச் செயல்களைக் குறைப்பதற்கான விசேட பொலிஸ் பிரிவின் செயற்பாடுகள் இதுவரை வெற்றியளித் துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றும்போதே இதனைத்தெரிவித்துள்ளார். கடந்த இருவாரங்களில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட முக்கியமான குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். பல குற்றச்செயல்களுக்கு இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே காரணமாக இருந்துள்ளனர், எனவும் அவர் கூறியுள்ளார்.


கிளி மத்திய கல்லூரியின்

75-வது ஆண்டு நிறைவு விழா

மேற்படி எமது பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு சில தீர்மானங்கள் எடுப்பதற்கான முக்கிய கலந்துரையாடல் 14.08.2003 இன்று பி.பகல் 2.00மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளதால் பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளித்து மேற்படி நிறைவுவிழாவைக் கொண்டாடுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பழையமாணவர் சங்கத்தினர்,
கிளி.மத்திய கல்லூரி.

(சி-8457)


# பரந்தன் நெற் களஞ்சியத்தில் இருக்கும் மக்களை அப்புறப்படுத்த நடவடிக்கை!

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் நெற் களஞ்சியத்தில் மக்கள் குடியமர்ந்துள்ளதன் காரணத்தினால் நெற்களஞ்சியப் புனரமைப்புகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென நெற் களஞ்சியப்பகுதியினர் கிளி அரச அதிபரின் கவனத்திற்குக்கொண்டு வந்துள்ளனர்.

இதனைச்செவிமடுத்த கிளி அரச அதிபர், இன்றைய காலகட்டத்தில் விவசாயிகளின் நெல்லினைக் களஞ்சியப்படுத்துவதற்குப் போதிய களஞ்சியங்கள் இல்லாமையின் காரணமாக நெல்லினைக் கொள்வனவு செய்வதற்குச்சம்பந்தப் பட்ட திணைக்களங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இந்நிலையில், மேற்படி களஞ்சியத்தினைப் புனரமைத்துச்சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எனவே கரைச்சிப்பிரதேச செயலர் களஞ்சியத்தில் குடியிருப்போரை அப்புறப்படுத்த உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளும் வண்ணம் பணிப்புரை விடுத்தார். (சோ)

## மீன்சந்தை திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் வத்திராயன் கடற்றொழிலாளர் சங்கம் கடந்த ஞாயிறன்று வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்திற்கு அண்மையில் வத்திராயன் கடற்றொழிலாளர் சங்க எல்லைக்கு உட்பட்ட மீனவர்களின் நன்மை கருதி ஒரு மீன் சந்தையைத்திறந்துள்ளது.

இதனால் இப்பிரதேச மக்கள் தமது கடல் உணவுகளை இச்சந்தை மூலம் விற்று நன்மை அடைய வாய்ப்பேற்பட்டுள்ளது. (11)


களரக வாகன ஓட்டுனர் பயிற்சியும் சாரதி அனுமதிப்பத்திரமும்

SELVA LEARNERS
KILINOCHCHI

செல்வா சாரதிப்பயிற்சி நிறுவனம்,
எஸ்.எல்.எஸ்.,
கிளிநொச்சி.

(சி-8455)



**சிந்தனைக்கு**

பூரண அரசியற் தெளிவும் – விழிப் புணர்வும் ஒரு போராளிக்கு அவசிய மானவை.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-08-2003

# பயனற்ற முயற்சி!

"ஜே.வி.பி– பொ.ஐ.முன்னணியின் கூட்டணியை கடவுள் வந்தாலும் நிறுத்த முடியாது. நான் உயிரோடு இருக்கும் போதே அதை நிறைவேற்றுவேன்'' என்ற அநுராபண்டார நாயக்கவின் சூளுரையானது உள் முரண்பாட்டைக் கொண்டதாகவுள்ளது.

ஜே.வி.பி–பொ.ஐ.மு.கூட்டணியை எந்தக் கடவுள் வந்தாலும், தடுத்து நிறுத்த முடியாது எனின் அநுராபண்டார நாயக்க ஏன் தனது வாழ்நாள் பூராவும் இதற்காக பாடுபட வேண்டும். அதாவது தடுத்து நிறுத்த முடியாத கூட்டணியை உருவாக்குவதில் தாமதம் ஏற்படுவது ஏன்? அதற்கு அநுராவின் முயற்சி ஏன்?

அநுரா பண்டாரநாயக்க இதற்கு முன்னரும் தனது உயிரைக் கொடுத்தாவது இக் கூட்டணியை உருவாக்கியே தீருவேன் எனச் சூளுரைத்திருந்தார். ஆனால், அதற்குப் பின்னர் இரு தரப்பிற்கும் இடையில் பல சந்திப்புக்கள் இடம் பெற்றுள்ள போதிலும் கூட்டணி இன்னமும் உருவாகவில்லை.

இக் கூட்டணி உருவாவதற்கு இருதரப்பின் இடையேயுள்ள கொள்கை வேறுபாடு காரணியல்ல. இரு தரப்பினரும் கொள்கைகள் கைவிடப்பட்ட நிலையிலேயே கூட்டணிக்கான பேச்சுக்கள் ஆரம்பித்தன. ஆனால், இரு தரப்பின் இடையேயும் முக்கியமான பிரச்சினையாக இருந்து வருவது பதவிப் பகிர்வும் கௌரவம் தொடர்பான விவகாரமுமே ஆகும். அதாவது முக்கிய பதவிகளைக் கோரும் ஜே.வி.பி, தாம் கௌரவமாக நடத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் கொண்டுள்ளது.

ஆனால், தொடராக நடந்த பேச்சுவார்த்தைகளில் அதிகாரப் பகிர்வு(பதவிகள்) குறித்த பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படினும், பொ.ஐ.முன்னணியிடம் இருந்து குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து ஜே.வி.பி.தலைவர்கள் எதிர்பார்த்த கௌரவம் கிடைக்கப் பெறுமா? என்பது சந்தேகமே. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா பொதுவிலேயே மற்றவர்களைக் கௌரவமாக நடத்துதல் வேண்டும் என்ற பண்பைக் கொண்டவரல்ல. அத்தோடு ஏனையவர்களின் கருத்திற்குச் செவி சாய்ப்பவரும் அல்ல. வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் இருந்து இலங்கையிலுள்ள பல்வேறு தரப்பினரிடமும் கௌரவக் குறைவாக அவர் நடந்து கொண்டமைக்கு ஆதாரங்கள் உண்டு.

இவை ஒரு புறம் இருக்கத் தமது கட்சித் தலைவர்கள், சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கூட அவர் கௌரவமாக நடந்து கொள்ளவில்லை. அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க, அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் போன்றோர் பொ.ஐ.முன்னணியில் இருந்து வெளியேறுவதற்கு அவரின் இத்தகைய நடவடிக்கைகளே காரணம் எனின் அது மிகையாகாது.

இந்நிலையில் ஜே.வி.பி, பொ.ஐ.முன்னணியிடம் இருந்து–அதிகம் குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்து கௌரவமான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியாது. இதனை ஜே.வி.பியும் ஒன்றைப் புரிந்து கொண்டுள்ளது என்றே கூறலாம். இதை வெளிப்படுத்துமாப் போல் அண்மையில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் பேச்சு இருந்தது. அவர் " சுதந்திரக் கட்சி தம்மைத் திண்ணையில் வைத்தே பேசவிரும்புகின்றது. " எனத் தெரிவித்திருந்தார்.

இதனை உணர்ந்துமாப் போல் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜே.வி.பி.யின் சிரேஷ்ட தலைவர்கள் சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கச் சென்ற வேளை சந்திப்பிற்காக நேரம் ஒதுக்கப்படவில்லை எனக் கூறி அவர்கள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த ரீதியில் ஏனையவர்களை, அவமானப்படுத்தும் வகையில் நடத்துபவரான சனாதிபதியுடன் ஜே.வி.பி. கூட்டுச் சேருவதனால் அது எதிர்பார்க்கப்படும் கௌரவம், அதற்குக் கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆகையினால், ஜே.வி.பி. சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேருவதால் ஒன்று தன்மானத்தை இழந்து சேருதல் வேண்டும். அன்றி சந்தர்ப்பவாத அரசியலுக்காகக் கூட்டுச் சேருதல் வேண்டும்.

ஆனால், இதற்காக அநுரா பண்டாரநாயக்க, தமது ஆயுளை முடித்துக் கொள்ளவோ அன்றி ஆயுட் கால முயற்சியோ செய்ய வேண்டியதில்லை. அவ்வாறு செய்தாலும் பயன் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஏனெனில், அநுரா பண்டாரநாயக்க உயிரை விடுவதாகவோ அன்றி ஆயுட்கால முயற்சி மேற்கொள்வதனாலோ சனாதிபதி சந்திரிகா தனது அகந்தையையோ, கர்வத்தையோ கைவிட்டு விடப்போவதில்லை. ஆகையினால், அநுராவின் நடவடிக்கைகளுக்கும் கூட்டணி உருவாவதற்கும் சம்பந்தம் எதுவும் இருக்கப் போவதில்லை.

# ஈழத்தமிழருக்கு உதவுவது எனது கடமை சிறைசென்றமைக்கு பெருமையடைகிறேன்

## - பழ. நெடுமாறன் நீதிமன்றில் கருத்து

ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டிய கடமையைத்தான் செய்தேன். அதற்காக சிறை செல்லும் வாய்ப்புக் கிடைத்துள்ளது குறித்து பெருமைப்படுகின்றேன் என்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

பொடோ சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எல். ராஜேந்திரன் முன்னிலையில் தம் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து பழ.நெடுமாறன் திங்கட்கிழமை அளித்த வாக்குமூலம் இவ்வாறு அளிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் கூறுகையில்:- இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான நாகலாந்து, மிஷோரம் ஆகியவற்றில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் தலைவர்களுடன் பிரதமர் வாஜ்பாயும் துணைப்பிரதமர் அத்வானியும் ஜப்பானிலும், டில்லியிலும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இப்பேச்சுவார்த்தை அதிகாரிகள் மூலம் தொடர்கின்றது.

தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவதே குற்றம் என்றால், பிரதமரும் துணைப் பிரதமரும் செய்தது என்ன? எனவே அரசியல் உள்நோக்கத்துடன் பழிவாங்கும் போக்கிலும் ஜனநாயக உரிமைகளை நசுக்கவும் எங்கள் மீது இந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் எங்களோடு இரத்தஉறவுகள் பூண்டவர்கள். சிங்களவரின் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு அவர்கள் துயரக்குரல் எழுப்பும் போது நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாது. மனித நேய உணர்வு கொண்டவர்கள் அனைவரும் அப்படி இருக்க முடியாது.

விடுதலைப்புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல. ஈழமக்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற இயக்கம். இந்திய விடுதலைக்காகப் போராடிய நேதாஜி சுபாஸ்சந்திரபோஸின் இந்திய தேசிய இராணுவம் போன்று பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தங்கள் மண்ணை மீட்கப் போராடி வருகின்றது.

எனவேதான், 57க்கு மேற்பட்ட உலக நாடுகள் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு சிங்கள அரசை வற்புறுத்திச் சம்மதிக்க வைத்துள்ளன. இதன் மூலம் ஈழத்தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக புலிகளை அங்கீகரித்துள்ளன. மறைந்த பிரதமர் இந்திரா காந்தியின் அறிவுரையை ஏற்க சிங்கள அரசு மறுத்ததால் புலிகளுக்கும் பிற போராளிகளுக்கும் ஆயுதப் பயிற்சி அளித்து ஆயுதம் வழங்க இந்திராகாந்தி ஏற்பாடு செய்தார்.

ஆனால், காழ்ப்புணர்ச்சியுடனும் உள் நோக்கத்துடனும் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டிய கடமையை நான் செய்ததற்காக பொடோ சட்டம் என்மீது ஏவப்பட்டுள்ளது.

ஈழத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் தங்கள் மண்ணை மீட்கத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்யும் போது, அவர்களுக்கு ஆதரவாக இந்த வயதில் சிறை செல்லும் சிறு தியாகம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது குறித்தும் பெருமைப்படுகின்றேன் என்றார்.

# பொருளாதார மேம்பாட்டினை நோக்கி அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

## -பிரதமர் ரணில் தெரிவிப்பு

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பொருளாதார முடிவுகளை மேற்கொள்ளும் நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமென அவர் கூறியுள்ளார்.சீனாவிற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு அதனை நிறைவுசெய்த வேளையில் பிரதமர் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடினார். சிறிலங்கா அதன் எதிர்காலத்தை தீர்க்கதரிசனத்துடன் நோக்குகின்றதென அவர் மேலும் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், உலகில் முக்கியமானதும் வலுவானதுமான பொருளாதார மையமாக சீனா விளங்குகிறது. சீனாவின் வளர்ச்சிக்கு அதன் தலைவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்புக் கொண்ட தேவைகள் அளப்பெரியன. துணிச்சலான பல முடிவுகளை அவர்கள் எடுத்தனர். தற்போதைய பரம்பரை முன்னைய தலைவர்களின் செயலாற்றலால் இன்று மகிழ்ச்சியாய் வாழ்கிறது.

சிறிலங்கா எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கு சீனாவிற்கும் சிறிலங்காவுக்குமிடையேயான நீண்ட கால உறவு பெரும் துணையாக இருக்கும்.

இவ்வாண்டு சிறிலங்காவிலிருந்து முக்கிய குழுக்கள் சீனாவிற்கு அனுப்பப்படும். இக்குழுவினர் சீனாவிற்கும் சிறிலங்காவிற்குமிடையே முன் வைக்கப்பட்டுள்ள உடன்படிக்கைகள் குறித்து ஆராய்வார்கள் என அவர் மேலும் கூறியுள்ளார்.

### ரணிலே அடுத்த சனாதிபதி -எஸ்.பி.

இந்த நாட்டின் அடுத்த சனாதிபதி தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே. எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் அவர் ஐ.தே. முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்டு அமோக வெற்றி பெறுவார். இதனை யாரும் மறுக்க இயலாது என அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

பொ.ஐ. முன்னணியில் யாரை சனாதிபதி வேட்பாளராக நியமிப்பது என்பதில் இழுபறி நிலை தோன்றியுள்ளதுஎன்றும்கூறினார்.

# ரூ.1500 கோடிக்கு பெக்காமுடன் ஒப்பந்தம்



இங்கிலாந்துக்கால்பந்தாட்ட அணித்தலைவர் டேவிட் பெக்காமுக்கு விளம்பர ஒப்பந்தத்திற்காக 10 கோடி ஸ்ரேலிங் பவுண்களை (சுமார் 1500 கோடி ரூபா) வழங்குவதற்கு பிரபலஅங்கிகள், உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனமான 'அடிடாஸ்' முன்வந்துள்ளது.


ஜேர்மனியைச்சேர்ந்த இந் நிறுவனத்திற்காக தற்போதும் விளம்பர மொடலாக விளங்குகிறார் பெக்காம். இந்த ஒப்பந்தம் முடிவடைய இன்னும் 3 ஆண்டு காலம் உள்ளது.

எனினும் உலகளாவிய ரீதியில் பெக்காமின் கவர்ச்சி மிகச்சிறந்ததெனவும் பெக்காம் கால்ப்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் இக்கவர்ச்சி தொடரும் எனவும் 'அடிடாஸ்' நிறுவனம்கருதுகின்றது.

இதனால் பெக்காமுடன் ஆயுட்கால ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ள 'அடிடாஸ்' விரும்புகின்றது. இதற்காக பெக்காமுக்கு 1500 கோடி ரூபா வழங்க இந்நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டால் விளையாட்டுலகில் மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தமாக இது அமையும்.

# போட்டிகளில் பங்கேற்க மறுக்கும் லுவீஸ் புகழுடன் வெளியேற விருப்பம்




உலக குத்துச்சண்டை சம்பியன் லுவிஸ் போட்டிகளில் பங்கேற்க தொடர்ந்து மறுப்புத்தெரிவித்து வருகின்றார்.

உலக குத்துச்சண்டை சம்பியன் பட்டத்தை லண்டனைச் சேர்ந்த லெனொக்ஸ் லுவிஸ் தன்வசம் வைத்துக் கொண்டிருக்கிறார். குத்துச்சண்டை அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தி இருந்த மைக் டைசனை வீழ்த்தியதன் மூலம் லுவிஸ் புகழின் உச்சியில் உள்ளார். இந்த நிலையில் கடந்த யூன் மாதம் விட்டலி கிளிட்ச்கோ என்ற வீரரையும் லுவிஸ் வீழ்த்தி பெருமையைத் தேடிக் கொண்டார்.

இதற்கிடையில் மைக் டைசன் மீண்டும் தன்னுடன் மோதும் படி லுவிசுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால், லுவிஸ் அதை ஏற்கவில்லை. நவம்பர் மாதம் ஒரு போட்டியை நடத்த சில கோடீஸ்வரர்கள் ஏற்பாடு செய்தனர். இதில் பங்கேற்கும்படி லுவிசை வற்புறுத்தினர்.இதையும் லுவிஸ் மறுத்து விட்டார்.இந்த ஆண்டு, தான் எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்று லுவிஸ் முடிவெடுத்துள்ளதாக லுவிசின் நெருக்கமானவர்கள் கூறியுள்ளனர்.

தற்போது 37 வயதாகும் லுவிஸ் உலகசம்பியன் பட்டத்துடன் விலகிவிட வேண்டும் என்று விரும்புவதாகத் தெரிகிறது. அவர் விரைவில் குத்துச்சண்டைப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார் என்கிற பேச்சு பலமாக அடிபட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் இது போன்ற செய்திகளை அவர் தொடர்ந்தும் மறுத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் திட்டத்தை அரசு ஏற்கலாம் அமுல் படுத்துமா என்பது கேள்வியே

## பா.உறுப்பினர் சிவாஜிலிங்கம்

யுத்தநிறுத்தம் அமுலில் இருந்து கொண்டிருக்கும் சூழ்நிலை இருந்தாலும் கூட விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருக்கின்றஓர் சூழ்நிலை தான் தற்போது காணப்படுகின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தம் ஏற்பட்டு ஒன்றரை வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் தற்போது பேச்சுக்களில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான தீர்வுத்திட்டம் இரண்டு பக்கத்திலும் மிகச் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவே செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த சூழ்நிலையில் இடைக்கால நிர்வாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற நல்ல ஒரு பதிலை அனுப்புவதற்குத் தான் விடுதலைப்புலிகளின் சட்ட வல்லுநர்கள் கூடி ஆராய இருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கு தாயகத்தில் எங்களது நிர்வாகத்தை நாங்களே நடத்தக்கூடிய விதத்தில் குறிப்பாக புனர் நிர்மாணம், மீள்குடியேற்றம், புனரமைப்பு போன்ற பணிகளை செய்வதற்குரிய அதிகாரங்களைக் கொண்டதாக சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிர்வகிக்கக்கூடிய அதிகாரங்களைக் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகத்தையே புலிகள் கோரி நிற்கின்றனர். அவர்களுடைய கோரிக்கை அரசியல் அமைப்புக்கு உட்பட்டதாக இருக்கப் போகின்றதா? அரசியல் அமைப்புக்கு அப்பாற்பட்டதாக இருக்கப் போகின்றதா? என்பதைப்பற்றி தற்பொழுது எதுவும் திட்டவட்டமாகக் கூறமுடியாது.

விடுதலைப்புலிகள் முன்வைக்கும் திட்டம் அரசுக்கு உகந்ததாக இருக்குமா?

பெரும்பாலும் அரசு ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருக்கும் என்றே நாங்கள் நம்புகின்றோம். ஆனால் அவர்கள் வைக்கின்ற திட்டத்தை வழங்கக்கூடிய நிலைமையில் இலங்கை அரசு இருக்குமா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குக் கீழ் 13வது திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட வடக்கு-கிழக்கில் உள்ள மாகாண சபைகளின் சட்டத்தின் கீழ் தான் இம் மாகாண சபை அமையப்போகின்றது.

# க.பொ.த.உயர்தரம் மேலும் சில சிறந்த பெறுபேறுகள்

**வித்தியானந்தாக் கல்லூரி**

**உயிரியல் பிரிவு**

இ.சஜீவன் ஏ,2பி மாவட்டநிலை 3
வி.துஷ்யன் 2பி,சி மாவட்டநிலை 4
சி.மணிகரன் 2பி,சி மாவட்டநிலை5
சி. கங்கையாணன் பி,2சி மாவட்ட நிலை 6
வ.பரணிதரன் பி,2சி
இ.ஜெயந்தன் 3சி
ந.நித்தியா பி,2சி

**கணிதம்**

கு.கௌரீசன் ஏ,பி,எஸ் மாவட்டநிலை10
க.யசிந்தா 2சி,எஸ்

**வர்த்தகம்**

க.கஜேந்திரன் 3ஏ நிலை 1
சு.சுகிர்தாசினி 2ஏ,பி நிலை 8
க.நிதர்சன் 2,ஏபி நிலை 9

**கலை**

ம.மகிதாசினி ஏ,2பி நிலை 3
ந.நந்தினி ஏ,2பி நிலை 6
க.குபேரினி 2ஏ,சி நிலை 7
ஜெ.சக்கரவர்த்தி 2ஏ,பி நிலை 9
பு.றமணன் ஏ,2பி
இ.பகிர்தினி ஏ.பி.சி

மருத்துவத்துறைக்கு 4பேர் தெரிவாகியுள்ளனர்.

**முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.**

**வர்த்தகப்பிரிவு -**

கீதபொன்கலன்-பீட்ஜெயகரன் ஏ,பி,சி
அன்ரன் பெனடிற்-யூட்குமார் 3பி
தங்கராசா-றமணன் 3சி

**கலைப்பிரிவு**

ஞானப்பிரகாசம்-யசோதா ஏ,பி,சி
குழந்தைவேல்-மதிவதனி 2பி,சி
சிவநாதன்-கஜேந்திரப்பிரசாத் பி,2சி
கணேசமூர்த்தி-தர்சினி 2பி,எஸ்: (ஆ)

# வேல்ஸ் நியூடவுன் அணியை வென்று தமிழீழ அணி சாதனை

(அலுவலக செய்தியாளர்)

12.08.2003 அன்று வேல்ஸ் நியூடவுன் அணியுடன் நடைபெற்ற போட்டியில் தமிழீழ அணி வேல்ஸ் நாட்டிற்கே மாபெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அன்று நடைபெற்ற நியூடவுன் தெரிவுக் குழுவுடன் சர்வதேச விதி முறைகளுக்கு அமைய 4 ஆட்டத் தொகுதிகளைக் கொண்ட போட்டியில் தமிழீழ அணி எதிர் அணியினரை 59-38 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியுள்ளது. இது அந்நாட்டு வலைப் பந்தாட்ட ஆர்வலர்களுக்கும், ரசிகர்களுக்கும் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் நியூடவுன் அணியினரே வெற்றிகளைப் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. தமிழீழ அணியை மிகவும் சுலபமாக வெல்ல முடியும் என்ற நம்பிக்கையுடன் களமிறங்கிய வேல்ஸ் அணியினருக்கு ஆரம்பம் தொட்டே அதிர்ச்சி காத்திருந்தது. தமிழீழ அணியினரின் லாவகரமான விளையாட்டு யுத்திகளுக்கும், ஒன்று சேர்ந்து விளையாடும் மதிநுட்பத்திற்கும் எதிர் அணியினர் ஈடுகொடுக்க முடியாததால் போட்டியின் பிற்பகுதியில் தமிழீழ அணியின் ஆட்டத்திறமை கையோங்கி இருந்தது. முடிவாக 59-38 என்ற கோல் கணக்கில் இலகுவாக வென்றது.

தமிழீழ அணியினர் தமது சுற்றுப் பயணத்தின் இதுவரை 14 போட்டிகளில் பங்கு பற்றி எதிலுமே தோல்வி அடையா நிலையில் வரும் 16ம் திகதி லண்டன் வாழ் கறுப்பின தேர்வு அணியினருடன் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இந்திய மீனவரின் அத்துமீறலுக்கு கடற்படையின் மனநிலையே காரணம்

## – இல.கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஹெமன்குமார

(யாழ்ப்பாணம்)

வட பிரதேசக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் பிரவேசத்திற்கு சிறிலங்காக் கடற்படையினரின் பக்கச் சார்பான மனநிலையுடன் கூடிய செயற்பாடே காரணம் என்று அகில இலங்கையின் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஹெமன் குமார குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நகருக்கு வருகை தந்த இவர் யாழ். மீனவர்களின் கஷ்டங்களை நேரில் சென்று பார்வையிட்டார். இதன் பின்பு அவர் கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் எல்லைகளைப் பாதுகாத்து பிற நாட்டவர்களின் ஊடுருவல்களைத் தடுக்க வேண்டியது கடற்படையினரின் கடமையாகும். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடற்பாதுகாப்பை வழங்க வேண்டியது சிறிலங்காக் கடற்படையினரின் அசமந்தப் போக்காலேயே இப்பகுதி மீனவர்கள், அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களைக் கைது செய்ய வேண்டியுள்ளது. இதனால் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது. இவ்வாறான சம்பவங்களுக்கு சிறிலங்காக் கடற்படையே பொறுப்பு என்றும் யாழில் காணப்படும் உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்கள் படும் இன்னல்களைக் கண்டு கவலைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.(33)

# பல்கலை .கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் நியாயமற்றவை

## -மூன்றாம்நிலை கல்வியமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமற்றவை என்று மூன்றாம் நிலைக் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறுவருடங்களாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறுகிய காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் கருதுவதில் நியாயமில்லை என அமைச்சர் கூறியுள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஏப்ரல் மாதத்தில் முன்வைத்த கோரிக்கைகளில் பன்னிரெண்டுக்கு மேற்பட்டவை நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் சட்டச் சிக்கல்கள் உள்ள கோரிக்கைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஏற்றவாறே முறை சாரா ஊழியர்களின் சம்பள அதிகரிப்பும் அமையவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய 1995ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்படாத கொடுப்பனவு நிலுவைகள் 350 ரூபா அதிகரித்த கொடுப்பனவுடன் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரான்ஸ்...

மும் ஆராயப்பட்டது. இது ஒரு முக்கியமான விவகாரம் என்று கூறிய எிக்சூல் ஹெய்ம் நேற்றுக் கொழும் பில் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு குறித்து அமைச்சர்களான ஜீ. எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம் மற்றும் முஸ்லிம் பிரமுகர்களுடன் கலந் துரையாடினேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

### பார...

ருளி ஓட்டுநர் ச. கோகுலசிறீ (வயது-28) தெரிவிக்கை யில்,ஏ-9 நெடுஞ்சாலை வழியாக பயணித்துக் கொண்டிருந்த வேளை ஏ-9 நெடுஞ்சாலையில் எதிரே வந்து கொண்டிருந்த பாரவூர்தியைக் கண்டு பிறேக்கினை (வேக நிறுத்தியை) அழுத்தியபொழுது உந்துருளி சறுக்கியதன் விளைவாக பாரவூதியின் சக்கரப் பகுதிக்கு முன்னால் தான் தூக்கி வீசப்பட்டதாகவும் தலைக் கவசம் (கெல்மெற்) அணிந்திருந்த தன் விளைவாகவும், பாரவூர்தி ஓட்டுனரின் சாதுரியத்தினாலுமே மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் தெரிவித்தார். (சோ)

### இந்.பத்தி..

யுள்ளேன் எனத் தெரிவித்துள்ள அவர்,பிரபாகரனைப் பற்றிச் சொல்வது என்றால் ரொம்பக் கஷ்டம். அவரது திறமைகளைப் பிரித்தறிய முடியாது. அவர் பன்முக ஆளுமை கொண்டவர். தமிழீழத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்வதற்கும் தயாராகவே இருக்கின்றார்.

### புலிகளுக்கு....

மேலும் 1982இல் எடுக்கப்பட்ட கடற்பிராந்தியம் சம்பந்தமான தீர்மானத்துக்கு அமைவாகவும் அரசியல்சாசனத்துக்கு அமைவாகவும்அரசு செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

### புலிகளின்...

அவர்கள் பதிலளித்தார்.

**கேள்வி: குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக ஏதாவது ஆராயப்பட்டதா?**

குரங்குபாஞ்சான் முகாமைப் பொறுத்தவரையில் நாங்கள் எங்களுடைய தெளிவான நிலைப்பாட்டை உண்மை நிலையை விளக்கி உள்ளோம். அந்த விடயத்தில் ஒரு முடிவுகளும் எட்டப்படவில்லை. எமது நிலைப்பாடுகளை தெளிவாக விளக்கி உள்ளோம்.

**கேள்வி: போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்ந்தும் இது ஒரு போர்நிறுத்த மீறல் என்கிறது. இதனை கொழும்பில் உள்ள ஊடகங்கள் தொடர்ச்சியாக வெளியிட்டுக்கொண்டு வருகின்றன. இது குறித்த உங்கள் அபிப்பிராயம் என்ன?**

ஊடகங்களும் சிங்கள இனவாத அமைப்புக்களும் இதை பெரிதுபடுத்துவது எமக்கு விளங்கவில்லை. எம்மைப் பொறுத்தவரை நாம் நீண்டகாலமாக அங்கு முகாம் அமைத்திருக்கிறோம். எங்களுடைய போராளிகள் நீண்டகாலமாக அதில் தங்கியிருக்கிறார்கள் என்கின்ற நிலைப்பாடுகளை நாம் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தத் தயாராகவே உள்ளோம்.

**கேள்வி: சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டுவரும் போர்நிறுத்த மீறல்கள் பற்றி ஏதாவது பேசப்பட்டதா?**

சிறிலங்கா இராணுவத்தின் போர் நிறுத்த மீறல்கள் சம்பந்தமாகவும் இப்பொழுது இராணுவ நெருக்குவாரங்கள்,இராணுவ நெருக்கடிகள் அதிகரித்திருப்பது சம்பந்தமாகவும் ஏற்கனவே நடந்த மீறல்கள் சம்பந்தமாகவும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**கேள்வி:- அரசால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நீங்கள் ஏற்கனவே ஒரு பதில் அறிக்கையை சமர்ப்பித்திருப்பதாகவும் அதில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. அதன் உண்மையான நிலை என்ன?**

பதில்:- இலங்கை அரசாங்கம் தயாரித்திருக்கின்ற இந்த இடைக்காலம் சம்பந்தமான வரைவில் உள்ளகுறைபாடுகளையும் அதில் புசிதாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயங்களையும் எமது தலைமைப்பீடத்தினுடைய எண்ணப்பாடுகளையும் அண்மைய நாட்களில் எமது தலைமைப்பீடம் கூடி ஆராய்ந்து அதற்கான தீர்மானங்களை எடுத்துள்ளது. அது சம்பந்தமாக எங்களுடைய சட்ட வல்லுநர்களோடும் நாங்கள் பாரிசில் கூட்ட இருக்கின்ற எங்களுடைய துறைசார் வல்லுனர்களுடன் கூடி ஆராய்ந்து அதற்கான இறுதிவடிவம் கொடுக்க இருக்கிறோம்.

**கேள்வி:சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் வடகிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், அமையப்போகும் இடைக்கால நிர்வாக சபையில் தாங்களும் தனித்தரப்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் இவ் இடைக்கால நிர்வாக சபையில் இரண்டு தலைமைகள் உடையதாகவும் அது ஒரு கூட்டான நிர்வாகத்தைக் கொண்டதாக இருக்கவேண்டும் எனவும் கூறுகிறார்கள் இது தொடர்பாக என்ன கூறுகிறீர்கள்?**

வடக்கு கிழக்கு இணைந்த தாயகப்பிரதேசத்தில் இங்கு வாழ்கின்ற மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்வது தான் எமது தலைமைப் பீடத்தின் முடிவாக உள்ளது.

அதில் முஸ்லிம் மக்களும் வட-கிழக்கில், எமது தமிழீழ தாயகத்தில் அவர்களும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கான பிரதிநிதித்துவமும் அவர்களுக்கான எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ற வகையிலும் நாங்கள் சில முடிவுகளை எடுக்க வேண்டும்.

அந்த வகையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடனும் நாம் கலந்தாலோசிக்க வேண்டிய தேவை உள்ளது. எதிர்காலத்தில் அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

**கேள்வி: அரச தரப்பு பேச்சுவார்த்தையாளர் ஜீ.எல்.பீரிஸ் அடுத்த மாதமளவில் பேச்சுக்கள் ஆரம்பமாகும் சாத்தியம் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். உங்களது தரப்பில் எவ்வாறான நம்பிக்கையுள்ளது?**

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் எங்களது தரப்பு நியாயங்களையும் எதிர்பார்ப்புக்களையும் தீர்மானங்களையும் வெகுவிரைவில் அரசுக்கு சமர்ப்பிக்கவுள்ளோம். அவர்கள் அதை சாதகமாகப் பரிசீலித்து சாதகமான தீர்மானங்களை எடுத்தால் விரைவிலே பேச்சுக்கள் தொடங்குவதற்கான சாத்தியம் இருப்பதாகவே நானும் கருதுகிறேன்.

**கேள்வி:சற்று இடைவெளியின் பின்னர் அமெரிக்கா உங்களை விமர்சிக்கத் தொடங்கியுள்ளது. அண்மையில் ஒரு அறிக்கைகூட வெளியாகியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

எங்களைப் பொறுத்த வரையில் அந்த குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை. நடுநிலைமையில் நின்று உண்மையை ஆராய்ந்து அந்த குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்ற போது அதனை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியும்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் ஒரு தரப்புக் கருத்துக்களை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றனர். இத்தகைய கருத்துக்களை முன் வைத்திருக்கின்றர். ஆகவே, தற்போதுள்ள சூழ்நிலையில் உண்மையான நிலைப்பாடுகள் வெளியில் வருகின்றபோது அவர்கள் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வார்கள் என நினைக்கின்றேன்.

**கேள்வி: இந்திய அரசின் நிலைப்பாடு, ஜெயலலிதாவின் நிலைப்பாடு பற்றி ஏதாவது கருத்துக்கள் கூறுவீர்களா?**

இந்திய அரசின் நிலைப்பாடுகளைப் பொறுத்த வரையில் அவர்கள் இந்த சமாதான முன்னெடுப்புகளுக்கும் அதாவது தமிழர் தாயகப் பிரதேசத்திலேயே ஒரு அமைதி தோன்றி இந்த மக்களுக்கு ஒரு நல்ல வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதுணையாக நிற்க வேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பு. தற்பொழுது சில நடவடிக்கைகள் எமது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற வகையில் சாதகமாக அமையாவிட்டாலும், தற்பொழுது அவர்கள் இந்த சமாதான முயற்சிகளை அவதானித்த வண்ணமுள்ளதால் எதிர்காலத்தில் எமது மக்களுடைய அபிலாசைகளை, எமது மக்களுக்கான தீர்வுகளை எட்டுவதற்கான முயற்சிகளுக்கு அவர்களும் தங்களது ஆதரவை வழங்குவார்கள் என்றே நாம் நம்புகிறோம்.

**கேள்வி: கண்காணிப்புக் குழு கொடுத்த உத்தரவுகளை நீங்கள் மீறுவதாகக் கூறுகிறது?**

கண்காணிப்புக் குழு ஒரு தரப்பு நியாயங்களை வைத்துக் கொண்டு தான் இதில் சில தீர்ப்புகளை வழங்கிவிட்டார்கள். ஆகவே, கண்காணிப்புக் குழுவிற்கு எமது தரப்பு நியாயங்களை விளக்கி உண்மைகளைப் புரிய வைப்பதிலும் எங்களுடைய முடிவு சரியானது என்பதை நிரூபிப்பதிலும் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவோம் என்றார். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது